## குறிப்புரை, வெளியுறவுத்துறை அதிகாரி ரொபர்ட் ஹில்டன்
## ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் - கொழும்பு, இலங்கை
## அமெரிக்க வர்த்தக சபை
## வருடாந்தப் பொதுக் கூட்டம்
## 2017 செப்ரெம்பர் 29

ரவின் அவர்களின் அன்புகலந்த அறிமுகத்திற்காக நான் உங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மீண்டும் ஒரு தடவை உங்களுடன் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகையதொரு நிகழ்வினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்ட அமெரிக்க வர்த்தக சபையின் பணிப்பாளர்களுக்கும் மற்றும் இந்த நிகழ்வினை ஒழுங்கமைப்புச் செய்வதற்காக கடினமாக உழைத்த ராதிகா அவர்களுக்கும் அவருடைய சக ஊழியர்களுக்கும் நான் முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றியுள்ள ராதிகா அவர்களின் வியத்தகு பணிகளுக்காக நான் அவருக்கு எனது நன்றிகளை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் உங்கள் பிரிவினால் வருத்தத்தை உணர்கின்றோம். எமது இழப்பு ஹேலீசுக்கு நன்மை பயக்கும் என்பதுடன், நீங்கள் அங்கேயும் வியத்தக பணிகளை ஆற்றுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

அமெரிக்க நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்யும் உங்களைச் சார்ந்தோருக்கும், அமெரிக்க வர்த்தகச் சமூகத்தினருக்கும் மற்றும் உங்கள் அனைவருக்கு நான் இத்தருணத்தில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் இன்றி அமெரிக்க வர்த்தக சபை என்பது கிடையாது. அமெரிக்க வர்த்தக சபைக் குழுவில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அமெரிக்க நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால், நானும் எங்கள் தூதுவர் இருவரும் மனநிறைவினைப் பெற்றுள்ளோம். அமெரிக்க நிறுவனங்கள் இன்னும் தொடர்ந்து சம்பந்தப்படுத்தப்படுகின்றன என்று நான் நம்புகின்றேன். ஏனெனில், அமெரிக்க வர்த்தக சபையானது மிகவும் பயனுறுதிமிக்க வகையில் இருப்பது அதற்கு ஒரு காரணமாகும். அத்துடன், திருப்புமுனையாக அமையும் இந்த அதிகரிக்கப்பட்ட தொடர்புகளும் அமெரிக்க வர்த்தக சபையினால் எதனை அடைந்து கொள்ள முடியும் என்பதில் வளர்ச்சியும் விருத்தியும் அடைகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றிகரமாக உள்ள அமெரிக்க வர்த்தக சபையானது பிரதானமாக மூன்று பண்புகளைக் கொண்டிருக்கின்றன என்று நாம் நம்புகின்றோம். அவையாவன:

1. *இது ஒரு பயனுறுதிமிக்க வழக்குரைஞராக உள்ளது.* இது அதன் உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பற்றிய கூட்டு அதிகாரம் பற்றிப் பேசுகின்றது.
2. *இது வேறுபட்டது.* இது சமூகம் மற்றும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலிருந்தும் பிரதிநிதித்துவத்தினைக் கொண்டுள்ளது.
3. இது தொடர்புடையது. இது மதிப்புமிககப் பெரு நிறுவனக் குடியுரிமையை ஊக்குவிக்கின்றது.

ஒரு சிறந்த பயனுறுதிமிக்க அமெரிக்க வர்த்தக சபையானது இலவச சேவை, நியாயமான வாணிகம், நெறிமுறை வாணிகம் மற்றும் வேலைவாய்ப்பு நடைமுறைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றினை உள்ளடக்குகின்ற அமெரிக்காவின் பெறுமதிகளுக்காக நிமிர்ந்து நிற்கின்றது.

இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கு அமெரிக்க நிறுவனங்களுக்கு இது ஒரு நல்ல நேரமாக அமைகின்றது. இவை இவற்றிற்கும் மற்றும் ஏனைய வேறு அடிப்படைப் பெறுமதிகளுக்கும் புதுப்பிக்கப்பட்ட பொறுப்புடைமையாக உள்ளது. அமெரிக்க நிறுவனங்கள் இங்கு வர்த்தகம் செய்வதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளன என்பதுடன், அமெரிக்க அரசு எமது நாடுகளுக்கு இடையே இருதரப்பு வர்த்தகத்தினை அதிகரிக்கும் வழிவகைகளிலும் ஈடுபட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர், ஐக்கிய அமெரிக்க வர்த்தக துணைப் பிரதிநிதி மார்க் லின்ஸ்கொர்ட் அவர்கள் கொழும்புக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கையில் வர்த்தகச் சூழலை மேம்படுத்துவதற்கும் வர்த்தகத்துறையினை அதிகரிப்பதற்குமான கொள்கைகளை அமுலாக்கம் செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தினை ஊக்கப்படுத்தினார். மார்க் முதலீட்டிற்கான வாய்ப்புக்களையும் இன்னும் மேலதிகமான கவரக்கூடியவகையில் உள்ள வர்த்தகத்துறை பற்றியும் அழுத்தமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் கேள்விப் பத்திரம் கோரலில் உள்ள பாரபட்சம் மற்றும் ஊழல் மோசடிகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுதல் உட்பட ஒலிப்பான, கணிப்பிடக்கூடிய மற்றும் வெளிப்படையான திறந்த பொருளாதாரக் கொள்கைகளை இலங்கையில் நிறுவ வேண்டியிருக்கும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களை மிகவும் பாதிக்கும் இலங்கையின் சில தீர்வைகளை நீக்குவது பற்றியும் அவர் கலந்துரையாடினார். அத்துடன் அறிவுசார் சொத்துரிமையை மேம்படுத்துமாறு வலியுறுத்திய அவர், WTO (உலக வர்த்தக நிறுவனம்) தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை ITA இல் (கைத்தொழில் பயிற்சி

அதிகார சபை) இணைந்து கொள்வதன் மூலம் தனது சொந்தப் போட்டித் தன்மையை அதிகரிக்கும் வகையில் இலங்கையினை ஊக்குவித்தார். அதேநேரம், மார்க் நுண்ணிய மட்டத்திலுள்ள சிக்கல்கள் பற்றியும் கலந்துரையாடினார். வெளிநாட்டு முதலீட்டிற்கு ஒரு தடையாக விளங்கும் வதிவிட வீசாக்களின் காலவரையறையினைத் தற்போது ஒரு வருட கால எல்லையாகக் கொண்டு வந்துள்ளார். இலங்கை அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு வதிவிட வீசாக்களின் கால வரையறையினை நீடிக்கும் என நாங்கள் கூறினோம். இது உங்களில் பலரை வரவேற்கத்தக்கதாக அமையும் என நான் நம்புகின்றேன்.

இலங்கை அரசாங்கம் அத்தகைய சாதகமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்போது, அமெரிக்க வர்த்தக சபை மற்றும் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து கூட்டு இலாபத்தினைப் பெற்ற பின்னர் அமெரிக்க நிறுவனங்கள் இயற்கையாகவே இலங்கை நாட்டினை மாற்றியமைக்கும். அவர்கள் அவ்வாறு மேற்கொள்ளும் போது, இலங்கைக்கு இன்னும் அதிக தரமுள்ள அமெரிக்காவின் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள முடியும். தற்போது இலங்கையின் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வருமானம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கு 269 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இரு நாடுகளின் இத்தகைய சாதகமான நிலைக்கு, இந்த மகத்தான பற்றாக்குறை மூடப்படுதல் வேண்டும். இந்த விவகாரத்தினை உரை ஆற்றுவதற்காக USTR (ஐக்கிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் அலுவலகம்) உடனும், இலங்கை அரசாங்கத்துடனும், வணிக சமூகத்துடனும் எமது தூதரகமானது தொடர்ந்தும் செயற்படும் என நான் இவ்விடத்தில் கூறுகின்றேன்.

எமது பணி, எமது பகிரப்படும் பணி சவால் மிக்கதாக விளங்குகின்றன, ஆனால் நாம் அனைவரும் இன்னும் மிகவும் அமைதியான வளமான ஓர் இலங்கை நாட்டினை நோக்கிப் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கின்றோம். அத்துடன், எமது கடினமான பணிகளின் மூலம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகள் மிகவும் நெருங்கிய நட்பு நாடுகளாக உருவாகுவதுடன், கூட்டணி நாடுகளாக இணைந்து ஒன்றாக வாணிகமும் செய்வோம். நாம் அனைவரும் பயன் பெறுவோமாக! அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பினையும் கூட்டுறவினையும் மேம்படுத்துவதற்காக நீங்கள் ஆற்றிய அனைத்துவிதமான சேவைகளுக்கும் உதவிகளுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

######